## ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டட்– 2017/2018

---

ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி'') 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென் நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 அபிப்பிராயம்

---

கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயங்கள் மீதான அழுத்தம்**

---

எனது அபிப்பிராயத்தினை முனைப்பழி செய்யாது, நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு தொடர்பான நிதிக்கூற்றுக்களின் 29 ஆம் குறிப்பிற்கு எனது கவனத்தை செலுத்துகின்றேன்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

ஆ. நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனி நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

எவ்வாறாயினும், 2018 மார்ச் 31 இல் உள்ளபடியான கம்பனியின் தேறிய சொத்துக்கள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் கூறப்பட்ட மூலதனம் அரைவாசியைவிடக் குறைவாகக் காணப்படுகின்றதுடன் தீவிரமான மூலதன இழப்பொன்றை முகங்கொடுகின்றமை குறிப்பிடப்படல் வேண்டும். நிதிக்கூற்றுக்களின் 30 ஆம் குறிப்பு இந்த நிலைமையினைக் குறைப்பதற்கு கம்பனியால் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளினை விபரிக்கின்றது. மானியங்களிலிருந்து இனங்காணப்பட்ட ரூபா 138,709,961 தொகையான வருமானம் நிதிக்கூற்றுக்களில் தனியாகக் காட்டுவதற்குப் பதிலாக செலவினத்திற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 மார்ச் 31 இல் உள்ளபடியான ரூபா 167,463,995 மொத்த கடன்பட்டோர் மீதியில், இரண்டு இந்தியன் கம்பனியிடமிருந்து ரூபா 147,261,000 கூட்டுத்தொகையான நிலுவை மீதிகள் நான்கு வருடங்களுக்கு அதிகமாக செலுத்துகையினை மேற்கொள்ளாது நிலுவையாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும்,

2018 செப்தெம்பர் இறுதிவரையிலும் கம்பனி அவ்வாறான மீதிகளினை அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) யாழ்ப்பான பல்கலைக்கழகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளரொருவரினால் நடாத்தப்பட்ட ஆய்வொன்றுக்கான உபகரணங்களினைக் கொள்வனவுசெய்வதற்கு ரூபா 2,286,129 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் 2015 ஆகஸ்ட் 10 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 1,852,700 தொகையொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 செப்தெம்பர் இறுதி வரையிலும் பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 433,429 மிகுதி அறவீடுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 9.2(உ) பிரிவு | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் பதவியணியினர்க்கு பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.3.1(i) ஆம் பிரிவு | கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டம் (எஸ்ஓஆர்) பொதுத்திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டின் ரூபா 131,961,978 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 145,272,784 வரிக்கு முன்னரான தேறிய நட்டமொன்றை விளைவித்திருந்தமையினால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 13,310,806 மேலுமொரு பற்றாக்குறைவை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில் ஆய்வு ஒப்பந்தங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 31,236,324 இனால் குறைவடைந்து காணப்பட்டமை நிதிசார் விளைவுகளில் இந்தப் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மூன்று தனியார் கம்பனிகளுடன் நான்கு ஆய்வு உடன்படிக்கைகளினை கம்பனி ஏற்படுத்தியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறான ஆய்வுகளிலிருந்து உழைக்கப்பட்ட மொத்த வருமானம் மற்றும் அவ்வாறான ஆய்வுகளின் மீது ஏற்பட்ட மொத்தக் கிரயம் முறையே ரூபா 19,641,861 மற்றும் ரூபா 29,259,689 ஆகக் காணப்பட்டதுடன் அது அவ்வாறான ஆய்வுகளின் மீது ரூபா 9,617,828 நட்டமொன்றைக் காட்டுகின்றது.

(ஆ) சாத்தியமான வாடிக்கையாளர்களுடன் ஆய்வு உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் “வாடிக்கையாளர் அடிப்படையிலான செயற்திட்டங்கள் மீதான முன் வேலை - Pre work on Client based Projects” இன் கீழ் 12 ஆராய்ச்சி செயற்திட்டங்களினை கம்பனி ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறான ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மீது ஏற்பட்ட கிரயம் ரூபா 4,769,944 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், தொடர்வதற்கு ஒரு செயற்திட்டம் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பரின் இறுதிவரையிலும் மிகுதியாகவுள்ள 11 செயற்திட்டங்களுக்கான சாத்தியமான வாடிக்கையாளர்களினை கண்டுபிடிப்பதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது. இந்த செயற்திட்டங்களுக்கு ஏற்பட்ட கிரயம் ரூபா 4,327,630 ஆகக் காணப்பட்டது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 2032/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், உயர்கல்வியை அபிவிருத்திசெய்யும் நோக்கத்திற்காக பட்டம் வழங்கும் நிறுவகமொன்றாக ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டட் இனங்காணப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இலங்கையில் நனோ அத்துடன் / அல்லது உயர்தர தொழில்நுட்பத்தில் பட்டங்களினை அளிப்பதற்கு ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனொரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டட்டினால் ஒரேயொரு உத்தரவாதமளிக்கப்பட்ட நிறுவகமாக 2017 செப்தெம்பர் 13 இல் “SLINTEC Academy (Guaranteed) Ltd” என்றழைக்கப்பட்ட தனியானதொரு நிறுவகம் கூட்டிணைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கையில் நனோ அத்துடன் / அல்லது உயர்தர தொழில்நுட்பத்தில் பட்டங்களினை அளிப்பதற்கு SLINTEC Academy (Guaranteed) Ltd இற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு எவ்வித ஆவணரீதியான சான்றுகளும் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2017/2018 ஆம் ஆண்டுகளுக்கான கம்பனியின் அளவைச் சபை அறிக்கைகளின் பிரகாரம், விளைவற்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 10,074,179 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2018 ஆகஸ்ட் இன் இறுதி வரையிலும் அந்த சொத்துக்களினை அகற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது தனியார் போக்குவரத்து கம்பனியொன்றிற்கு ரூபா 1,800,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தபோதிலும், பெறப்பட்ட சேவைகளுக்காக உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தனியார் கம்பனியொன்றுடன் ஆரம்பிக்கப்படவேண்டுமென பட்டியல்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்றிற்காக 2016 ஒக்தோபர் 31 இல் ரூபா 416,747 தொகையான வர்ணப்பூச்சுக்களினை நிறுவகம் கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை அல்லது செலுத்துகைகள் கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை அத்துடன் வர்ணப்பூச்சுக்கள் பயன்படுத்தப்பட்டிராது கருத்திற்கொள்ளத்தக்க காலப்பகுதியொன்றுக்கு கம்பனியில் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(உ) கல்விச்சாலையினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பில் SLINTEC Academy இற்கு கம்பனியினால் ரூபா 1,715,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கல்விச்சாலையினால் செய்து முடிக்கப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் கல்விச்சாலையின் உத்தியோகத்தர்களுக்கான செலுத்துகை தொடர்பில் உடன்படிக்கைகள் அல்லது சபை தீர்மானங்கள் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வாகனமொன்றை வாடகைக்கமர்த்துவதற்கான உடன்படிக்கை 2018 யூலை 2 இல் காலாவதியாகியிருந்தபோதிலும், 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் உடன்படிக்கையினை புதுப்பிப்பதற்கு அல்லது நீடிப்புச் செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2017/2018 ஆம் ஆண்டில் கொள்வனவுசெய்யப்பட்ட ரூபா 3,574,063 தொகையான மோட்டார் வாகனமொன்று மற்றும் தொட்டுரணமுடியாத சொத்துக்களுக்கு மூலதன படிகளினை பிழையான விகிதத்தின் பிரயோகித்ததன் காரணமாக பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு ரூபா 911,827 இனால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

## 4.3 விளைவற்ற சொத்துக்கள்

இரண்டு ஆய்வுகூடங்களின் நிர்மாண வேலை பூர்த்தியாக்கப்பட்டிருக்காதபோதிலும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இரண்டு ஆய்வுகூடங்களுக்காக ரூபா 92,083,892 பெறுமதியுடைய 32 ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடம் கொள்வனவுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்தச் சொத்துக்கள் 2018 ஆகஸ்ட் இறுதிவரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தியின் 2030 நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவனங்களும் செயற்படவேண்டியதுடன் ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டட் அதன் பரப்பெல்லையின் கீழ் காணப்படும் தொழிற்பாடுகளினை அமுல்படுத்தும் முறையினை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 பெறுகை முகாமைத்துவம்

பெறுகை வழிகாட்டலின் 4.2.1(இ) வழிகாட்டலின் பிரகாரம், நேர திட்டத்துடன் ஒவ்வொரு பெறுகையின் கட்டங்களினை விபரித்து கம்பனியால் விபரமான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | நீண்ட நிலுவையாகவுள்ள மீதிகள் அறவீடுசெய்யப்பட்டிருக்காமை |
| (ஆ) | ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முகாமைத்துவம் | இடர்களினைக் குறைக்க ஆராய்ச்சி உடன்படிக்கைகளில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்காமை |
| (இ) | விலைப்பட்டியலிடல் | முறையான கட்டுப்பாடொன்று அமுல்படுத்தப்பட்டிருக்காமை |
| (ஈ) | முற்பணங்கள் | முறையான நடைமுறையிலிருந்து விலகி முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை. |
| (உ) | ஒப்பந்த சேவைகள் | ஒப்பந்த உடன்படிக்கைகளினை கைச்சாத்திடுவதில் தாமதங்கள் |